**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.269/2013**

**வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | அடைக்கன் |
| தகப்பனார் பெயர் | : | பழனியாண்டி |
| வயது | : | 58/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | அய்யலூர், தீத்தாகிழவனூர் |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 10.09.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டனார் குமரனம்பலம் அவருடைய சகோதரர் குப்பாண்டி, சிவந்திஅம்பலம், ஆறுமுகம் அம்பலம், முருகன் அம்பலம் ஆகியோர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சொத்தாகும் தாவா சொத்து. மேற்படி ஆறுமுகம் அம்பலம் 53 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக எனது பாட்டனார் குமரனம்பலம் அவருடைய சகோதரர் ஆறுமுக அம்பலம் அவருக்கு பாகத்திற்கு பிரிந்து அவர் அனுபவித்து வந்தார்.

ஆறுமுகம் அம்பலத்தின் தந்தை பெயர் அடைக்கன். அவரை பு.அ.ஆறுமுக அம்பலம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். பு.அ.ஆறுமுக அம்பலத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். பு.அ.ஆறுமுக அம்பலத்திற்கு வாரிசுகள் ஏதும் கிடையாது. பு.அ.ஆறுமுக அம்பலத்தின் சகோதரர் குப்பாண்டி அம்பலம்

என்றால் சரிதான். குப்பாண்டி அம்பலத்திற்கு மாரியப்பன் மற்றும் தீத்தான் அம்பலம் ஆகியோர் மக்கள் என்றால் சரிதான். மேற்படி தீத்தான் அம்பலத்திற்கு 1ம் பிரதிவாதி கணேசன் மற்றும் அவருடைய சகோதரர் அடைக்கன் வாரிசுகள் என்றால் கணேசன் வாரிசு ஆவார். அடைக்கன் என்பவர் பெயர் இல்லை. ஆனால் தீத்தான் அம்பலத்தின் மற்றொரு வாரிசின் பெயர் தங்கராசு ஆகும். வெளியில் அழைப்பது தங்கராசு என்றும், ஆனால் ஆவணங்கள் அடிப்படையில் அடைக்கன் என்ற தங்கராசு என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**